# செப்டம்பர் – 18 – செவ்வாய்

## புனித யோசப் குப்போர்டினோ

**“தாய்க்கு அவர் ஒரே மகன். அத்தாயோ கைம்பெண்”. - லூக்கா 7 : 12**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 12:12 –14,27-31

சகோதர சகோதரிகளே உடல் ஒன்றே உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்துவும் இருக்கிறார். ஏனெனில், யூதரானாலும் கிரேக்கரானாலும், அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களா னாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம். உடல் ஒரே உறுப்பால் ஆனது அல்ல பல உறுப்புகளால் ஆனது. நீங்கள் கிறிஸ்துவின் உடல் ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள். அவ்வாறே திருச்சபையிலும் கடவுள் முதலாவது திருத்தூதர்களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், மூன்றாவது போதகர்களையும், பின்னர் வல்லசெயல் செய்வோர்களையும், அதன்பின் பிணிதீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள், துணை நிற்பவர்கள், தலைமையேற்று நடத்துபவர்கள், பல்வகை பரவசப்பேச்சு பேசுகிறவர்கள் ஆகியோரையும் ஏற்படுத்தினார். எல்லாருமே திருத்தூதர்களா? எல்லாருமே இறைவாக்கினர்களா? எல்லாருமே போதகர்களா? எல்லாருமே வல்லசெயல் செய்பவர்களா? இல்லை. எல்லாருமே பிணிதீர்க்கும் அருள்கொடையைப் பெற்றவர்களா? எல்லாருமே பரவசப் பேச்சுப் பேசுகிறவர்களா? எல்லாருமே விளக்கம் அளிப்பவர்களா? இல்லையே! எனவே நீங்கள் மேலான அருள்கொடையையே ஆர்வமாய் நாடுங்கள். எல்லாவற்றையும்விடச் சிறந்தநெறி ஒன்றை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் மக்கள் நாம் அவர் மேய்க்கும் ஆடுகள்

## நற்செய்தி : லூக்கா 7 : 11 – 17

அக்காலத்தில் இயேசு நயீன் என்னும் ஊருக்குச்சென்றார். அவருடைய சீடரும் பெருந்திரளான மக்களும் அவருடன் சென்றனர். அவர் அவ்வூர் வாயிலை நெருங்கிவந்தபோது, இறந்த ஒருவரைச் சிலர் தூக்கிவந்தனர். தாய்க்கு அவர் ஒரேமகன் அத்தாயோ கைம்பெண். அவ்வூரைச் சேர்ந்த பெருந்திரளான மக்களும் அவரோடு இருந்தனர். அவரைக்கண்ட ஆண்டவர், அவர்மீது பரிவுகொண்டு, ”அழாதீர்” என்றார். அருகில்சென்று பாடையைத்தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர், ”இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு” என்றார். இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினார். இயேசு அவரை அவர் தாயிடம் ஒப்படைத்தார். அனைவரும் அச்சமுற்று, ”நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார். கடவுள் தம்மக்களைத் தேடி வந்திருக்கிறார்” என்றுசொல்லிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். அவரைப்பற்றிய இந்தச்செய்தி யூதேயா நாடு முழுவதிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் பரவியது.

**தியானம்:** இன்றைய நற்செய்தியை வாசிப்பவர்களுக்கு நமது தாய்நாட்டில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் நினைவிற்கு வரக்கூடும். அங்கு எத்தனை தாய்மார் தமது பிள்ளைகளின் உயிர்களைப் பறிகொடுத்து, அப்பிள்ளைகளது உடல்களை உரியமுறையில் அடக்கம் செய்யமுடியாதவர்களாக, வேதனைப்பட்டது நமது மனக்கண்களில் ஊசலாடலாம். முற்றுமுழுதாக அவ்வாறான ஒருநிலை இல்லாவிடினும், தனது ஒரேமகனைப் பறிகொடுத்த விதவைத் தாய் ஒருவரை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். தாய்க்கு அவர் ஒரே மகன் என்பதனால் “நயீன்” என்ற ஊரே திரண்டு வந்ததாக நற்செய்தி தெரிவிக்கிறது. இவ்வாறு லூக்கா நற்செய்தி தெரிவிக்கும் ஒரு நிலையே அன்று கல்வாரியிலும் இடம்பெற்றிருந்தது. கல்வாரியில் இடம்பெற்ற அனைத்துச் சம்பவங்களும் இன்றைய நற்செய்திக்கு ஏற்ப ஒரே மாதிரியாக இல்லாதிருப்பினும், ஒருசிலவிடயங்களில் ஒற்றுமை இருப்பதனை நாம்காணலாம். தனது ஒரேமகனைப் பறிகொடுத்தவளாக (நயீம் ஊரின் தாய் போன்று) அன்னை மரியாள் கல்வாரியில் கதறிநின்றாள். அங்கு ஜெருசலேம் நகரத்தார் பலர் (ஊரே திரண்டு) “வேடிக்கை பார்க்க” கூடிநின்றனர். உழுத நிலம்போன்று உருக்குலைந்த நிலையில் கல்வாரியில் இறைமகன் இயேசு அன்னையின் மடியில் கிடத்தப்பட்டிருந்தார். அவ்வேளயில் அன்னையின் வியாகுலத்தை விபரிக்கமுடியுமா?. எனினும் இவ்விரு சம்பவங்களது இறுதி முடிவும் மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது. “நயீம்” ஊரில் விதவையின் “ஒரே மகன்” இறைமகன் இயேசுவால் உயிர்பெற்று எழுகின்றான். அன்னை மரியாளின் அன்பு மைந்தன் மூன்றாம்நாள் வல்லமையோடும் மாட்சிமையோடும் யூத இராஜ சிங்கமாக உத்தானமானார். எனவே, பாவத்தால் இறந்துபோன எமது ஆன்மாவிற்கு புத்துயிர் அளிப்பதற்காகவே இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்துள்ளார் என்ற உண்மை தெளிவாகின்றது. நாம் பாவ இருளில் மூழ்கி ஆன்மாவில் இறந்தவர்களாக வாழ்ந்தாலும், இறைமகன் இயேசுவின் கருணையால் மீண்டும் புத்துயிர் பெற்று புதுவாழ்வு பெறமுடியும் என்று விசுவசித்து ஏற்றுக்கொள்வோம். பணமும், இவ்வுலக சுகபோக வாழ்வும் எம்மை ஆன்மாவில் இறந்த நிலைக்கு உள்ளாக்கும் என உணருவோம். “உயிர்ப்பும், உயிரும் நானே” என்றவர் எமது “வாழ்வின் வழியும், உண்மையுமாக” இருக்கின்றார் என்பதில் சந்தேகமேயில்லை. எனினும் “நயீம்” ஊரின் இளைஞனைத் தொட்டது போன்று, இறைமகன் இயேசு எம்மைத் தொடுமளவிற்கு அவரை நாங்கள் நம்பி விசுவசித்து ஏற்றுக் கொள்கின்றோமா?